நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

June 2017

2017

தரம் : தொடக்க நிலை
Level : Basic

வழங்கப்படும் நேரம் : 60 நிமிடங்கள்
Time Given : 60 Minutes

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

ஆசிரியரின் கவனத்திற்கு :
மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.
(ஆசிரியர்கள் வாசிப்பில் உதவி செய்தலாகாது).

**For questions 1 to 4, choose the word that best describe the action shown in the picture.**

1 முதல் 4 வரையுள்ள வினாக்களுக்கு அருகில் உள்ள படத்தில் **நடக்கும் செய்கையைச்** சரியாகக் குறிக்கும் சொல்லைத் தெரிவு செய்க.

**1.** நாய் சத்தமாகக் ........................................ .

(a) கனைக்கிறது

(b) கர்ச்சிக்கிறது

(c) ஊளையிடுகிறது

(d) குரைக்கிறது



**2.** ........................................ குளத்தில் குளிக்கிறது.

(a) புலி

(b) யானை

(c) பூனை

(d) மான்



**3.** கூடையில் ........................................ எடுத்துச் செல்லப் படுகிறது.

(a) மரக்கறிகள்

(b) பூக்கள்

(c) பழங்கள்

(d) மாலைகள்



**4.** ........................................ நோயாளிகளுக்கு மருந்து கொடுக்கிறார்.

(a) ஆசிரியர்

(b) ஓவியர்

(c) வைத்தியர்

(d) தச்சர்



**Read and understand the given poem and answer the questions 5 to 8.**

கீழே தரப்பட்ட பாடலை வாசித்து அதிலிருந்து 5 முதல் 8 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.

அழகு கொண்ட மயில்
பளபளக்கும் கண் மயில்
நீளக் கழுத்து மயில்
கொத்தி உண்ணும் மயில்
கத்தி உலாவும் மயில்
தத்தி நடக்கும் மயில்
தாவிப் பறக்கும் மயில்



5. இப்பாடலில் வரும் பறவை என்ன?

(a) மயில் (b) குயில் (c) குருவி (d) கிளி

**6.** மயில் எப்படி உணவு உண்ணும்?

(a) கொத்தி (b) வெட்டி (c) காலால் (d) பல்லால்

**7.** **“கண்”** - இந்தச் சொல்லின் ஒத்த கருத்துள்ள சொல் என்ன?

(a) வாய் (b) கை (c) காது (d) விழி

**8.** மயிலின் கழுத்து

(a) வட்டமானது (b) அகலமானது (c) நீளமானது (d) உயரமானது

**For questions 9 to 12, choose the word that has the closest meaning to the underlined word.**

9 முதல் 12 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லிற்கு **ஒத்த கருத்துள்ள சொல்லைத்** தெரிவு செய்க.

9. வாணி அழகான <u>காப்பு</u> அணிந்திருந்தாள்.

(a) மாலை (b) வளையல் (c) தோடு (d) சங்கிலி

10. அதிகாலையில் <u>கடவுள்</u> வணக்கம் செய்வது நல்லது.

(a) ஆசிரியர் (b) சூரியன் (c) சந்திரன் (d) இறைவன்

11. சென்ற <u>வாரம்</u> நான் மெல்பன் சென்றேன்.

(a) மாதம் (b) கிழமை (c) ஆண்டு (d) வருடம்

12. அப்பா <u>**சீக்கிரம்**</u> வீட்டிற்கு வந்தார்.

(a) தாமதம் (b) விரைவில் (c) நேற்று (d) காலையில்

**For questions 13 to 15, choose the opposite word to the underlined word in the sentence.**
13 முதல் 15 வரையுள்ள வினாக்களில் கோடிட்ட சொல்லிற்கு **எதிர்ச் சொல்லை** தெரிவு செய்க.

**13.** எனது பை மிகவும் **<u>பழையது</u>**.

(a) புதியது (b) சிறியது (c) பெரியது (d) நீண்டது

**14.** கண்ணனும் வாணியும் **<u>அருகில்</u>** இருந்தார்கள்.

(a) பக்கத்தில் (b) கதிரையில் (c) மேசையில் (d) தூரத்தில்

**15.** கலா **<u>உள்ளே</u>** வாருங்கள் என்று அழைத்தாள்.

(a) கீழே (b) மேலே (c) பக்கத்தில் (d) வெளியே

Read and understand the poem below and answer the questions 16 to 20.
கீழே தரப்பட்ட பாடலை வாசித்து 16 முதல் 20 வரையுள்ள வினாக்களுக்கு பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

பறக்காத பறவை



பறக்காத பறவையினம் நாங்கள் - நாம்
பவனிவரல் அழகென்பீர் நீங்கள்
இறக்கைநிகர் இருகைகள் தட்டை - என்றும்
இவைநீந்தத் துணைசெய்யும் செட்டை

பகல்முழுதும் கடலில்மீன் பிடிப்போம் - எம்
பசிதீர்த்துப் பொந்துக்கு நடப்போம்
மிகச்சிறிய குஞ்சுகளை எண்ணி - நாம்
மீன்சொண்டில் காவிஇரை கொடுப்போம்

கடலோர மணலில்நம் பொந்து - அது
காலமெலாம் நாம்வாழும் சந்து
நடைஅழகுப் பறவைஇனம் நாங்கள் - எம்
நடைபயிலச் சேருங்கள் நீங்கள்

- கவிஞர் அம்பி

**16.** படத்தில் கூறப்பட்டுள்ள பறவை எது?

(a) பென்குயின் (b) மயில் (c) குயில் (d) கிளி

**17.** நீந்த உதவுகின்ற உறுப்பு எது என கூறப்பட்டுள்ளது?

(a) தட்டை (b) செட்டை (c) மட்டை (d) குட்டை

**18.** குஞ்சுகளின் உணவு எதுவென கூறப்பட்டுள்ளது?

(a) பழம் (b) மீன் (c) இலை (d) பால்

**19.** இவ்பறவைகள் வாழும் இடம் எது எனக்கூறப்பட்டுள்ளது?

(a) மணற் பொந்து (b) மரப்பொந்து

(c) கடற்கரை (d) சாலையோரம்

**20.** 'நடைஅழகுப் பறவைஇனம்' என பறக்காத பறவையைக் கூறியதன் காரணம் என்ன?

(a) இவை நடந்து செல்லும் போது பார்க்க மிகவும் அழகாக இருக்கும் என்பதால்

(b) இவற்றிற்கு நடக்க தெரியாததனால்

(c) இவற்றிற்கு பறக்க தெரியாததனால்

(d) இவை நடந்து செல்வதை பார்க்க முடியாததனால்

For questions 21 to 25, choose the correct word to complete the sentence.
21 முதல் 25 வரையுள்ள வினாக்களுக்கு **பொருத்தமான சொல்லைக்** கொண்டு வசனத்தை பூர்த்தி செய்க.

**21.** சென்ற வாரம் தாத்தா கான்பரா ................................................ .

(a) செல்வார் (b) சென்றார்

(c) சென்று கொண்டிருக்கிறார் (d) செல்கிறார்

**22.** அவனுக்கு ஒன்றும் ................................................ .

(a) தெரியும் (b) தெரியாது

(c) தெரிய வேண்டும் (d) தெரிந்தது

**23.** நான் அவர்களைப் பார்த்தேன். அவர்களும் என்னைப் ................................................ .

(a) பார்க்கவில்லை (b) பார்த்திருக்க வேண்டும்

(c) பார்த்திருக்க கூடாது (d) பார்த்திருக்க முடியாது

**24.** வாணி கலாவுக்கு ஒரு கடிதம் எழுதி ..........................................................

(a) முடித்தான்
(b) முடிக்கிறார்கள்
(c) முடித்தன்
(d) முடித்தாள்

**25.** ........................................................ அமைதியாக இருங்கள்.

(a) நீ
(b) நாங்கள்
(c) நீங்கள்
(d) அவர்கள்

For questions 26 - 30, choose the word that is spelt incorrectly in the given sentence.
26 முதல் 30 வரையுள்ள வினாக்களுக்கு, தரப்பட்ட வசனத்தில் எழுத்துப் **பிழையான சொல்லைத்** தெரிவு செய்க.

**26.** பாராளுமன்றம் மிகவும் அலகாக இருந்தது.

(a) பாராளுமன்றம்
(b) மிகவும்
(c) அலகாக
(d) இருந்தது

**27.** மாடுகள் வயள் வெளிகளில் மேயும்.

(a) மாடுகள்
(b) வயள்
(c) வெளிகளில்
(d) மேயும்

**28.** மலை அடிவாரத்தில் மளை பெய்தது.

(a) மலை
(b) அடிவாரத்தில்
(c) மளை
(d) பெய்தது

**29.** எனக்கு கால் வளிக்கிறது. என்னால் வேகமாக நடக்க முடியாது.

(a) கால்
(b) வளிக்கிறது
(c) என்னால்
(d) வேகமாக

**30.** வானவிள்ளில் ஏழு நிறங்கள் உள்ளன.

(a) வானவிள்ளில்
(b) ஏழு
(c) நிறங்கள்
(d) உள்ளன



Look at the picture above and answer the questions 31 to 33.
மேலே உள்ள படத்தை பார்த்து 31 முதல் 33 வரையான வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**31.** படத்தில் பூனை எங்கே இருக்கிறது?

(a) வீட்டின் உள்ளே

(b) வீட்டிற்குப் பக்கத்தில்

(c) வீட்டின் கூரையில்

(d) வீட்டிற்கு கீழே

**32.** வீட்டிற்கு அருகில் இருப்பது என்ன?

(a) பூனை

(b) யன்னல்

(c) மரம்

(d) கூரை

**33.** பந்து எங்கே உள்ளது?

(a) வீட்டில்

(b) மரத்தின் அருகில்

(c) யன்னலில்

(d) வாசலில்

For questions 34, choose the response that combines the sentence in the best way.

34. கீழே தரப்பட்ட வசனங்களைச் **சரியான ஒழுங்கில்** அமைத்துக் காட்டுக.

**தமிழ்ப் புதுவருடப் பிறப்பு**

(1) அதன் பின் வீட்டில் விருந்து உண்டு மகிழ்வோம்

(2) சித்திரை மாதம் முதலாம் நாள் தமிழ் புதுவருடப் பிறப்பு

(3) அன்று நீராடி புதிய ஆடைகள் அணிவோம்

(4) கோவிலுக்கு சென்று கடவுளை வணங்குவோம்

(a) (2), (3), (4), (1)

(b) (1), (3), (2), (4)

(c) (4), (3), (2), (1)

(d) (3), (4), (2), (1)

35 Write the meaning to the sentence.

35. **கருத்து எழுதுக**

"தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை". இதன் கருத்து?

(a) தந்தை மந்திரம் சொல்வார்

(b) அப்பாவின் சொல்லுக்கு மேலான அறிவுரை இல்லை

(c) அப்பாவிடம் மந்திரம் படி

(d) தந்தையிடம் மந்திரம் இல்லை

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு
NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# Dr Venthanar Ilango Memorial Tamil Proficiency Examination

2017